பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 16 செவ்வாய்க்கிழமை 01.12.2020 கதிர் 256

## அக்கரைப்பற்றில் 91 பேருக்கு தொற்று

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்று 235 ஆக அதிகரித்துள்ளதுடன் அக்கரைப்பற்றில் இன்று வரை 91 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

எனவே அக்கரைப்பற்று ஓர் உப கொத்தணியாக உருவாக வாய்பளிக்காதீர்கள் என கிழக்கு மாகாண சுகாதார

2

# இலங்கைப் படைகளுக்கு உதவிகள் செய்த பிரி. நிறுவனம் மீது யுத்தக் குற்ற விசாரணை

## ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸ் ஆரம்பித்தது



**லண்டன்,டிசம்பர் 02**

**இலங்கை அரச படைகளுக்கு உதவியதாகக் கூறப்படும் பிரிட்டன் நிறுவனம் ஒன்றுக்கு எதிராக சர்வதேச நாடொன்றில் போர்க்குற்ற விசாரணை ஆரம்பமாகியுள்ளது.**

**அந்தவகையில், இலங்கையில் உள்நாட்டுப் போரின்போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எதிராக பிரிட்டன் பாதுகாப்பு நிறுவனம் ஒன்று செயற்பட்டதா என்பது குறித்து ஸ்கொட்லண்யார்ட் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.**

2

## மஹர சிறைச்சாலை கலவரம் 4 பிரிவுகளாக விசாரணைகள்

### அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு




மஹர சிறைச்சாலை கலவரம் தொடர்பில் நான்கு வெவ்வேறான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு

2

## மஹர சிறை அமைதியின்மை: சாவடைந்தோர் 9 ஆக உயர்வு!

### காயமடைந்தோர் எண்ணிக்கையும் 113 ஆக அதிகரிப்பு

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையால் உயிரிழந்த கைதிகளின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது.

அமைதியின்மையில் காயமடைந்து, ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவர் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார்.

இதன்படி, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அமைதியின்மையால் உயிரிழந்த கைதிகளின் எண்ணிக்கை 8 இலிருந்து 9 ஆக அதிகரித்துள்ளது.

ராகம வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஷெல்டன் பெரேரா இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் காயமடைந்தோரின் எண்ணிக்கை 109ஆக அதிகரித்துள்ளது.

2

## தனக்கு தொற்று இல்லை என்கின்றார் ரோஹித



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகன் ரோஹித ராஜபக்ஷ தனக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை என தெரிவித்துள்ளார்.

''கொழும்பிலேயே இருக்கின்றேன், கண்டியில் தனிமைப்படுத்தப்படவில்லை. நானோ எனது குடும்பமோ கொரோனாவினால் பாதிக்கப்படவில்லை" - எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2

## ஒரே நாளில் 6 விபத்துகள்; எழுவர் பரிதாப உயிரிழப்பு

நாட்டில் ஒரே நாளில் இடம்பெற்ற 6 வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் சிக்கி ஏழு பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற 6 விபத்துக்களில் 7 பேர் உயிரிழந்துள்ளமை, கடந்த இரண்டு மாதங்களுக்கு பின்னர் அதிகளவான வாகன விபத்துக்கள் இடம்பெற்ற நாளாகப் பதிவாகியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதியிலிருந்து இன்று வரையான காலப்பகுதியில் மிகக் குறைந்தளவிலான வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன எனவும், இந்த வாரம் ஆரம்பம் முதல்

2

## முன்னர் தீர்மானிக்கப்பட்ட தினத்தில் நடைபெறாது சாதாரண தரப் பரீட்சை

### கல்வி அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு



ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 18ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடத்துவதற்கு கல்வி அமைச்சு ஏற்கனவே தீர்மானித்திருந்த நிலையில், குறித்த தினத்தில் பரீட்சை நடைபெறாது எனக் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இன்று தெரிவித்தார்.

2

## காரைநகரில் தனிமைப்படுத்தப்பட்டவர் யாழ். வைத்தியசாலையில் உயிரிழப்பு!

காரைநகரில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவர் சுகயீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

காரைநகரில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவரது வீட்டுக்கு அண்மையில் வசித்த வந்த 60 வயதுடைய வயோதிபரே உயிரிழந்தார்.

குறித்த வயோதிபர் கடந்த சனிக்கிழமை முதல் வீட்டில் சுயதனிமைப்படுத்தப்பட்டார்.

மூச்சுத் திணறல் காரணமாக அவர் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு கொரோனா நோய்த் தொற்று தனிமைப் படுத்தல் விடுதியில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டது. எனினும்,

2

### சூறாவளி எச்சரிக்கையையடுத்து

## கிழக்கு பாடசாலைகளுக்கு 3 நாள்களுக்கு விடுமுறை!

கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் நாளை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையில் மூடப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலை, சூறாவளியாக மாறி நாளை இலங்கையின் கிழக்குக் கரையோரப் பகுதி ஊடாக கடக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தினால் சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதைக் கருத்தில்கொண்டே பாடசாலைகளை மூடத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சூறாவளியால் கிழக்கில் அனர்த்த நிலைமைகள்

2

## வெளிமாவட்டங்களிலிருந்து கிளிநொச்சி வருவோருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள்



வெளிமாவட்டங்களில் இருந்து வந்தவர்களால் கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருகின்றது. இந்தநிலையில், வெளிமாவட்டங்களில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருபவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இன்று அதிகாலை 3 மணியிலிருந்து காலை 6

2

## 3ஆம் அலையில் 105 பேர் மரணம்

### 20,448 பேருக்குத் தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலைமூலம் இதுவரையில் 20 ஆயிரத்து 448 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் நேற்று மாத்திரம் 12 ஆயிரத்து 31 பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 503 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

3ஆவது அலைமூலம் (மினுவாங்கொட, பேலியகொட கொத்தணிகள்) வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் 14 ஆயிரத்து 152 பேர் குணமடைந்துள்ளனர்.

இலங்கையில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்து 986 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 17 ஆயிரத்து 559 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 309 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. 118 பேர் உயிரிழந்துள்ளனர்.

## மஹர சிறை அமைதியி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு காயமடைந்தவர்களில் இரண்டு அதிகாரிகளும் அடங்குகின்றனர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குற்றவாளிகள் மற்றும் சந்தேகநபர்கள் ஆகியோருக்கிடையிலும் மோதல் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், இன்று அதிகாலையும் சில கைதிகள் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்கள் அனைவரும், சிறு காயங்களுக்கு உள்ளானவர்கள் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை வாக்குமூலங்களைப் பதிவுசெய்துகொள்ள முடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மஹர சிறைச்சாலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காணொலி தொழில்நுட்பம் மூலம் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் விசாரணை அறிக்கை வெளியான பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் முடிவு அறிவிக்கப்படும். சம்பவத்தின் பின்புலம் பற்றி ஆராயவேண்டும்.

சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை திணைக்களம் விசாரணை முன்னெடுக்கின்றது. சிறைச்சாலை இராஜாங்க அமைச்சும் விசாரணை நடத்துகின்றது. நீதி அமைச்சும் ஐவரடங்கிய குழுவொன்றை அமைத்துள்ளது. சி.ஐ.டியினரும் தனியான விசாரணையை முன்னெடுக்கின்றனர் - என்றார்.

## ஒரே நாளில் 6 விபத்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் வாகன விபத்துக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பைக் காணக்கூடியதாக உள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## முன்னர் தீர்மானிக்கப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், பரீட்சைக்கான புதிய திகதி 6 வாரங்களுக்கு முன் அறிவிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

தற்போது நாட்டில் உள்ள நிலைமையில் பரீட்சைகளை நடத்துவது அநீதியானது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## அக்கரைப்பற்றில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் வைத்தியர் அ.லதாகரன் தெரிவித்தார்.

கொரோனா தொற்று தொடர்பாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளரை தொலைபேசியில் இன்று செவ்வாய்க்கிழமை தொடர்பு கொண்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலையில் சுகாதார பிராந்தியத்தில் 16 பேரும், அம்பாறை சுகாதார பிராந்தியத்தில் 11 பேரும், மட்டக்களப்பு சுகாதார பிராந்தியத்தில் 88 பேரும், கல்முனை சுகாதார பிராந்தியத்தில் 120 பேர் உட்பட 235 பேருக்கு இன்று முதலாம் திகதிவரை கொரோனா தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 03ஆம் பக்கத்தில்)

## கிழக்கு பாடசாலைக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படக்கூடும் என்பதால் அதற்கு முகம் கொடுக்கும் வகையில் தேவையான முன்னேற்பாடுகள் மேற்கொண்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

இதன்படி இடம்பெயரும் மக்களை பாடசாலைகளில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மேலும் தெரிவித்துள்ளார்.

## காரைநகரில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இன்று உயிரிழந்தார்.

மருத்துவர்களின் குறிப்பேட்டின்படி குருதியின் அளவு அரைவாசியாகக் குறைந்ததால் அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது இறப்புத் தொடர்பில் உடற்கூற்றுப் பரிசோதனையை செய்வதா? அல்லது பி.சி.ஆர். பரிசோதனையின் அறிக்கை கிடைத்த பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனையைச் செய்வதா? என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகம் ஆராய்ந்து வருகின்றது என இன்று பிற்பகல் தகவல் கிடைத்தது.

## தனக்கு தொற்று ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் அலுவலகத்தை சேர்ந்த சிலர் பாதிக்கப்பட்டமையைத் தொடர்ந்து கடந்த மாதம் நானும் எனது குடும்பத்தினரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தனிமைப்படுத்தலை முன்னெடுத்தோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். பி.சி.ஆர். சோதனையின் போது நாங்கள் பாதிக்கப்படவில்லை என்பது உறுதியானது என அவர் தெரிவித்துள்ளார்.

## வெளி மாவட்டங்க ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணி வரை கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில், வெளிமாவட்டங்களில் இருந்து வந்த வாகனங்களின் சாரதிகள், உதவியாளர்கள் மற்றும் பயணிகள் என 67 பேருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட பி.சி.ஆர். மாதிரிகளின் முடிவுகளை கிளிநொச்சி, கரைச்சி பிராந்திய சுகாதாரப் பணிமனையில் நாளைமறுதினம் பெற்றுக்கொள்ள முடியும் என்று கரைச்சி பிராந்திய சுகாதாரப் பணிமனையின் வைத்தியர் சுரேந்திரன் தெரிவித்தார்.

## இலங்கைப் படை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1980களில் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான சண்டையில் பிரிட்டன் பாதுகாப்பு நிறுவனத்தின் பங்கு குறித்து ஸ்கொட்லண்ட்யார்ட் போர்க்குற்றக் குழுவே இந்த விசாரணையைத் தொடங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒடுக்க இலங்கையின் விசேட பொலிஸ் படைக்கு பிரிட்டனின் கே.எம்.எஸ். என்ற தனியார் பாதுகாப்பு நிறுவனம் பயிற்சி வழங்கியது எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து கடந்த மார்ச் மாதத்தில் ஒரு பரிந்துரை கிடைத்தது எனவும், அது தற்போது விசாரணையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது எனவும் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் வெளிவந்த - பிரிட்டனைச் சேர்ந்த புலனாய்வுப் பத்திரிகையாளர் பில் மில்லர் எழுதிய - புத்தகத்தில், இலங்கையில் உள்நாட்டுப் போரில் கே.எம்.எஸ். பாதுகாப்பு நிறுவனத்தின் போர்க்குற்றங்கள் குறித்து குறிப்புகள் இருந்தன. இதுவே ஸ்கொட்லண்ட்யார்ட் போர்க்குற்ற குழுவின் விசாரணைக்கு வித்திட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து பில் மில்லர் மேலும் கூறுகையில் -

இந்தப் பொலிஸ் விசாரணையை நான் வரவேற்கிறேன். இது நீண்ட கால தாமதமாகும். கே.எம்.எஸ்.க்கு எதிரான பெரும்பாலான சான்றுகள் பிரிட்டன் வெளியுறவு அலுவலக கோப்புகளில் 30 ஆண்டுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் கொந்தளிப்பான வரலாற்றில் இந்தப் பிரிட்டன் நிறுவனத்தின் பங்கு எந்த அளவுக்கு உள்ளது என்றும் கேட்க நிறைய கேள்விகள் உள்ளன - என்றார்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சிங்கள இராணுவத்துக்கு தமிழர்கள் ஆள்சேர்ப்பு

**தமிழினத்தின் தனித்துவத்தைச் சிதைத்தழிக்கும் திட்டத்தின் அடுத்த கட்டம் கட்டவிழ்கின்றது.**

**அதற்கு யாழ் செயலகம் மூலம் வலை விரிக்கப்படுவதுதான் விசனத்துக்குரியது.**

**தேர்தல் சமயத்தில் ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு என்று அறிவித்தார்கள். அதுவும் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் கூட சித்தியடையாதவர்களுக்கு அரச வேலை என்ற போது எல்லோரும் மகிழ்ந்துதான் போனார்கள்.**

**வடமாகாணத்தில் இத் திட்டத்தின்கீழ் 15 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு என்றனர். விண்ணப்பங்கள் கோரிப் பெறப்பட்டு தெரிவுகளும் நடைபெற்றன. அந்த வேலை வாய்ப்பைத் தாம்தான் பெற்றுத் தரப் போகின்றார் என்ற சுத்துமாத்துக் கதையை மக்கள் முன் அவிழ்த்து விட்டு, அதனைக் காட்டி சிங்களக் கட்சி ஒன்றின் சார்பில் எம்.பி. பதவியை ஒருவர் சுருட்டிக் கொண்டும் போய் விட்டார்.**

**ஆனால், தேர்தல் பின்னர் இந்த நியமனம் வடக்கு, கிழக்குக்கு இல்லை என்று தனது இனப் பாகுபாட்டுப் போக்கை அம்பலப்படுத்தி அறிவித்தது கோட்டா அரசு. ஆனால் அந்த அரசுக்குக் காவடி தூக்கி, எலும்புத் துண்டுகளாக வாலாட்டும் தரப்பு மட்டும், இந்த நியமனத்தைப் பெற்றுத் தருவேன் என்று பிரசாரப்படுத்தி, அதன் மூலம் வாக்குத் திரட்டி, பதவியைப் பிடித்த பின்னர், இப்போது மௌனம் காத்துப் பம்மிக் கொண்டு நிற்கின்றது. வடக்கில் இந்த 15 ஆயிரம் நியமனமும் 9 ஆயிரம் என்று குறைக்கப்பட்டதாக முதலில் அறிவிக்கப்பட்டது. இப்போது ஒரு லட்சம் நியமனங்களில் தெற்கில் 35 ஆயிரம் பேருக்கு அந்நியமனம் வழங்கப்பட்டு விட்டது. அதில் வடக்குக்கு ஆக 265 நியமனங்கள் மட்டுமே கிட்டின.**

**ஆக, ஒரு லட்சம் நியமனங்களில் 15 ஆயிரம் நியமனங்களைத் தருவார்கள் என்று தேர்தல் சமயத்தில் அறிவித்தார்கள். அது இப்போது ஆக 265 ஆகக் குறுகி விட்டது.**

**இந்தத் திட்டத்தின் கீழ் இதற்கு மேல் வடக்கு மாகாணத்துக்கு ஏதும் கிடைக்கும் என்று நம்புவதற்கும் இடமில்லை. நிதி அமைச்சர் என்ற முறையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்டத்தை பரிசீலித்தால் இந்த வேலை வாய்ப்பு இப்போதைக்குக் கிடைப்பதற்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை.**

**இதற்கிடையில் இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பு என்ற பெயரில் தென்னிலங்கை கொடுக்கும் வலையை யாழ் செயலகம் நமது இளைஞர்களுக்கு விரிக்கின்றது.**

**இலங்கை இராணுவம் தனிச் சிங்கள இராணுவமாக இருக்கின்றது, அதில் ஏனைய இனத்தவர்களுக்கு இடமளிக்கப்படவில்லை, அதனால் அது இலங்கை இராணுவமேயல்ல, சிங்கள இராணுவம்தான் என்ற குற்றச்சாட்டு தமிழர் தரப்பினால்தான் முன்வைக்கப்படுகின்றது.**

**அதற்காக, இராணுவத்தில் ஏனைய இனத்தோரையும் சேர்த்துக் கொள்ளும் திட்டம் இது என்றால், இதனை வரவேற்க வேண்டியதுதான்.**

**அப்படியாயின், அந்தத் திட்டத்தில் முதலில் இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் சிறுபான்மை இனத்தவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.**

**ஆனால், இப்போது விரிக்கப்படும் வலை அதுவல்ல. குறைந்த பட்சம் சாதாரண சிப்பாய்களுக்கான ஆள் சேர்ப்புக் கூட அல்ல.**

**இது, இராணுவத்தில் தச்சு மற்றும் மேசன் போன்ற நானாவித வேலைகளுக்கு ஆள் சேர்க்கும் திட்டம்.**

**அந்தக் கீழ் மட்ட வேலைகளில் சிறுபான்மை இனத்தவரை முடக்கி, அதற்கு மேல் மட்டத் தரங்களுக்கு பெரும்பான்மையினரை நியமித்து, இராணுவக் கட்டமைப்பை நிலைநிறுத்துவது என்பது மிகவும் கபடமான – கரவான – இனவாத நோக்கம் கொண்ட நடவடிக்கையாகும்.**

**இராணுவத்தின் கீழ் மட்டத் தொழிலாளர்களுக்கும் நல்ல வேதனம் என்ற பந்தாவைக் காட்டி, இலங்கை இராணுவத்தில் தமிழர்களை அல்லது சிறுபான்மையினரைப் பிரதானமாகக் கொண்ட கீழ்மட்ட வேலையணி ஒன்றை உருவாக்கித் தந்திரோபயமாகக் கையாளும் ஒரு கபடத் திட்டம் இது.**

**அது மாத்திரமல்ல, உரிமை கோரும் தமிழினத்தின் இளஞ் சமூகத்தை – பல்லாயிரக் கணக்கான இளைஞர்களை – கீழ் மட்ட வேலையணி என்றாலும் இலங்கை இராணுவத்தின் அங்கம் என்ற பெயரில் தனியாகப் பிளந்து வைத்துக் கொண்டால் – தமிழினத்தின் கைகளையே வைத்து, தமிழினத்தின் கண்களைக் குத்தச் செய்யலாம் என்பது சிங்களத்தின் கரவுத் திட்டம். அவே இப்போது கட்டவிழ்கின்றது.**

**அதற்கு யாழ் செயலகமும், செயலக அதிகாரிகளும் துணை போகின்றமை விசனத்துக்குரியது. தேவையற்ற வேலை. அரச ஊழியர்கள், அரச பணியாளர்கள் என்ற முறையில் இது போன்ற விடயங்களைக் கையாள வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் அவர்களுக்குத் தவிர்க்க முடியாதவை என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதே.**

**எனினும் இத்தகைய இன விரோத நடவடிக்கைகளுக்குத் துணை போவதில் கொஞ்சம் எச்சரிக்கையாகவும் பின்னடிப்புப் போக்குடனும் நடந்து கொள்வது தமிழ் அதிகாரிகளுக்கு உசிதமானது என்பதையும் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.**

# யாழ். இளைஞர்களை இராணுவத்தில் சேர அழைக்கிறார் யாழ் அரச அதிபர்!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,டிச.01

யாழ்ப்பாண மாவட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்கு தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் இணைய முன்வரவேண்டும் என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் அழைப்பு விடுத்துள்ளார்.



இராணுவத்திற்கு இளைஞர்,யுவதிகளை இணைக்கும் தேசிய ரீதியான வேலைத்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட இளைஞர்களை இராணுவத்தில் இணைப்பது தொடர்பாக விளக்கம் அளிக்கும் விசேட கூட்டம் யாழ் மாவட்ட செயலகத்தில் இன்றைய தினம் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

இளைஞர், யுவதிகளுக்கு சிறந்த ஒரு சந்தர்ப்பமாக இந்த வாய்ப்புக் காணப்படுகின்றது எனவே பிரதேச மட்டங்களில் கிராம சேவகர்கள் குறித்த ஆள்சேர்ப்புத் தொடர்பாக பொதுமக்களுக்கு விளக்கம் அளிப்பதன் ஊடாக இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள முடியும் . அதிலும் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வேலைவாய்ப்பு பிரச்சினை பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது.

இதனால் யாழ்ப்பாண மாவட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்கு தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் இணைய முன்வரவேண்டும். – என்றார்.

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கைவிடப்பட்ட நிலையில் 5 சடலங்கள்!

## கொரோனாவால் உயிரிழந்தவர்கள்

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் 5 உடல்கள் இன்னும் தகனம் செய்யப்படாமல் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர், ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவித்தபோது இதனை உறுதி செய்துள்ளார்.

மேற்படி 5 சடலங்களில் சிலர் முஸ்லிம்கள் என்றும், தகனம் செய்வதை அவர்களின் உறவினர்கள் மறுப்பதால் அவர்கள் இன்னும் உடலைப் பெற்றுக்கொள்ளாமல் தாமதித்து வருகின்றனர் எனவும் குறித்த அதிகாரி கூறியுள்ளார்.

இவர்களில் சிலர் உண்மையிலேயே நிதி நெருக்கடி மற்றும் வறுமை நிலைமை காரணமாகப் பிரேதப் பெட்டிக்குப் பணம் இல்லாததால் சடலத்தைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரு வாரமாகியும் மாணவர் வரவு இன்னும் சீரடையாத நிலைமை

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,டிச.01

கொரோனா அச்சத்தின் பின்பு பாடசாலைகள் மீள ஆரம்பித்து ஒரு வாரம் கடந்துவிட்ட போதிலும் மாணவர்களின் வரவு வீதம் 60 தாண்டவில்லை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

கொரோனாத் தாக்கத்தின் பின்பு கடந்த 23.11.2020 அன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் மாணவர்களின் வரவு நேற்றுவரை மிகவும் மந்தமாகவே உள்ளது.

வடக்கு மாகாணத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கடந்த 23ஆம் திகதி 49 வீத வரவு கானப்பட்டது. இது இன்றும் 60 வீதமாகவே காணப்பட்டது.

இதன் காரணமாக கற்றல் – கற்பித்தல் நடவடிக்கைகள் சீராக முன்கொண்டு செல்லப்படுவதில் தொடர்ந்தும் இடையூறாகவே இவ்விடயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் எதிர் வரும் வாரத்தில் மாணவர் வரவை அதிகரிக்க கல்வி அதிகாரிகள் முயற்சித்து வருகின்றனர்.

# ‘கொரோனா’வின் பேராபத்து வலயமானது அக்கரைப்பற்று

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றுப் பிரதேசம் நேற்றிலிருந்து உடனடி நடைமுறைக்கு வரும் வகையில் கொரோனா அதி ஆபத்து வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு தெரிவித்துள்ளது.

குறித்த பிரதேசத்தில் கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவிவரும் நிலையில் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதை உறுதி செய்ய சுகாதார அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படையினர் அக்கரைபபற்றில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்றுப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இதுவரை 58 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மதுபோதையில் நாகபாம்புடன் விளையாடியவர் யாழில் சாவு!

யாழ்ப்பாணம் – வல்வெட்டித்துறையில் மதுபோதையில் நாக பாம்புடன் விளையாடியவர் அது தீண்டியதில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) இரவு மதுபோதையில் வீட்டுக்கு வந்த அவர், நாக பாம்பைப் பிடித்து விளையாடியுள்ளார். சில நிமிடங்கள் கழித்து அதனை அயலிலுள்ள வளவில் வீசிவிட்டு தூக்கத்துக்குச் சென்றுள்ளார்.

அதனைத் தொடர்ந்து தூக்கத்தால் திடீரென எழுந்த அந்த நபர், நெஞ்சு வலிப்பதால் குடிதண்ணீர் கேட்டுள்ளார். 3 செம்பு குடிதண்ணீரை அருந்திய அவர், நெஞ்சு வலிப்பதாகக் கூறியுள்ளார்

இதனால், அவரது உறவினர்கள் உடனடியாக பருத்தித்துறை – மந்திகை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

மேலும், அவரது கையில் பாம்பு தீண்டிய அடையாளம் காணப்படுகின்றது என ஆரம்ப விசாரணைகளின் பின் பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில் சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மந்திகை வைத்திசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# கொரோனா பரவுகை இந்தியாவில் வீழ்ச்சி



புதுடெல்லி,டிசெ.01

இந்தியாவில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனா பாதிப்புகளால் 482 பேர் உயிரிழுந்து உள்ளனர்.

கொரோனா தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் உள்ள இந்தியாவில் கடந்த 24 மணிநேரத்தில் 31 ஆயிரத்து 118 பேருக்கு கொரோனா பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இது நேற்றைய (38,772), நேற்று முன்தினம் (41,810) எண்ணிக்கையை காட் டிலும் மிக குறைவாகும்.

இதனால் இந்தியாவில் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 94 லட்சத்து 62 ஆயிரத்து 810 ஆக உயர்வடைந்து உள்ளது. இதே போன்று கடந்த 24 மணிநேரத்தில் 482 பேர் கொரோனா பாதிப்புகளால் உயிரிழந்து உள்ளனர். நேற்று இந்த எண்ணிக்கை 443 ஆக இருந்தது. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை சற்று அதிகரித்து உள்ளது.

இதனால் நாட்டில் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை நேற்றைய எண்ணிக்கையான 1 லட்சத்து 37 ஆயிரத்து 139ல் இருந்து 1 லட் சத்து 37 ஆயிரத்து 621 ஆக இன்று உயர்ந்து உள்ளது. எனினும், சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை நேற்றைய 4 லட்சத்து 46 ஆயிரத்து 952ல் இருந்து 4 லட்சத்து 35 ஆயிரத்து 603 ஆக குறைந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் 45 ஆயிரத்து 333 பேர் சிகிச்சை பெற்று தொற்றில் இருந்து குணமடைந்து சென்றுள்ளனர். இதனால், சிகிச்சை பெற்று குணமடைந்து சென்றவர்களின் எண்ணிக்கை நாடு முழுவதும் இதுவரை 88 லட்சத்து 89 ஆயிரத்து 585 ஆக உயர்ந்து உள்ளது.

# ரஜினிகாந்திடமும் ஆதரவு கேட்பாராம் கமல்ஹாசன்!

தேர்தலில் அனைவரிடமும் ஆதரவு கேட்கும்போது நண்பர் ரஜினியிடமும் கேட்பேன் என மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

அனைவரிடமும் ஆதரவு கேட்கும்போது நண்பர் ரஜினியிடம் மட்டும் ஆதரவு கேட்காமல் இருப்பேனா? ரஜினிக்கு அரசியலை விட ஆரோக்கியம் முக்கியம், அத்தோடு நலமாகவும் அவர் இருக்க வேண்டும்.

2021 தேர்தலில் ரஜினி அரசியலுக்கு வந்தால் போட்டி போடுவேன், அரசியலுக்கு வரவில்லை என்றால் ரஜினியிடம் ஆதரவு கேட்பேன் என்றும் தெரிவித்தார். மேலும் டெல்லியில் போராட்டம் நடத்திவரும் விவசாயிகளுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்தோஷ்பாபு மக்கள் நீதி மய்யம் கட்சியில் அண்மையில் இணைந்தார்.

அவரைப் பொதுச்செயலராக கமல் நியமித்தார். இதன் போது கருத்துத் தெரிவித்த சந்தோஷ்பாபு தமிழக அரசின் அழுத்தம் காரணமாகவே தான் பதவி விலகினேன் என்றும்,



தமிழகம் மற்றைய மாநிலங்களை விட முன்னேறியுள்ள போதும் அதை வைத்துத் திருப்தி அடைய முடியாது. தமிழகம் அடைந்த வளர்ச்சியைவிட இன்னும் முன்னேற வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம், - என்றும் தெரிவித்தார்.

# பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதனை



புதுடெல்லி,டிசெ.01

இந்தியாவின் அதிநவீன பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை பரிசோதனை வெற்றியடைந்து உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் இராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி கழகம் சார்பில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட பிரம்மோஸ் ஏவுகணை இந்திய கடற்படையினரால் இன்று விண்ணில் ஏவி பரிசோதிக்கப்பட்டது.

வங்காள விரிகுடா கடற்பகுதியில் அந்தமான் நிகோபர் தீவு பகுதிக்கு உட்பட்ட கார் நிகோபர் தீவில் இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். ராண்விஜய் போர் கப்பலில் இருந்து அதிநவீன பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை இன்று காலை 9.25 மணியளவில் விண்ணில் ஏவி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

300 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கை தாக்கி அழிக்க கூடிய திறன் வாய்ந்த இந்த ஏவுகணை பரிசோதனை வெற்றியடைந்து உள்ளது. குறிப்பிட்ட இலக்கில் இருந்த கப்பலை, ஏவுகணை சரியாக தாக்கியது என இந்திய கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வங்க கடலில் உருவாகும் புரெவி புயல்

சென்னை,டிசெ.01

வங்க கடலில் வலுப்பெற்றுள்ள காற்றமுத்த தாழ்வு மண்டலம் இன்று புயலாக வலுப்பெறும் என இன்று செவ்வாய்க்கிழமை காலை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்க கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் திருகோணமலையில் இருந்து கிழக்கு – தென் கிழக்காக 590 கிலோ மீற்றர் தொலைவிலும் கன்னியாகுமரிக்கு கிழக்கே 1000 கிலோ மீற்றர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மைய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அடுத்த 12 மணி நேரத்தில் புயலாக வலுப்பெற்று மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை மாலை இலங்கையைக் கடந்து குமரிக்கடல் பகுதிக்கு நகரக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இன்று தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மூன்று நாட்களுக்கு மீனவர்கள் தெற்கு வங்க கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# புரெவிப் புயலினால் சூறாவளிக் காற்று வீசலாம்

டிசெம்பர் 3 ஆம் திகதி குமரி, நெல்லை உள்பட 8 மாவட்டங்களில் மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று வீசக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்து உள்ளது.

திருகோணமலையில் இருந்து 530 கி.மீ. தொலைவில் காற்றமுத்த தாழ்வு மண்டலம் உருவானது. பின்னர் அது ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது.

ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் 24 மணி நேரத்தில் புயலாக வலுவடையும். நாளை மாலை அல்லது இரவில் இலங்கையில் புரெவி புயல் கரையைக் கடக்க வாய்ப்புள்ளது. தென் தமிழகம், கேரளாவில் அதி கன மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டது.

# கொரோனா மருத்துவமனையில் தீ; குஜராத்தில் 5 டாக்டர்கள் கைது!

*ராஜ்கோட்,டிசெ.01*

குஜராத்தில் கொரோனா மருத்துவமனைத் தீ விபத்து சம்பவத்தில் 3 மருத்துவர்களைபொலிஸார் கைது செய்துள்ளனர்.

குஜராத்தில் ராஜ்கோட் நகரில் உள்ள உதய் சிவானந்த் என்ற மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த மருத்துவமனையில் கடந்த 27 ஆம் திகதி அதிகாலையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இதில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த 5 கொரோனா நோயாளிகள் சிக்கிப் பலியானார்கள். பலர் காயமடைந்தனர். தீ விபத்து பற்றி விசாரணை மேற்கொள்ளும்படி மாநில முதல் மந்திரி விஜய் ரூபானி உத்தரவிட்டமையுடன், தீ விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.4 லட்சம் இழப்பீடு வழங்கவும் உத்தரவிட்டார்.

இதுபற்றி துணை ஆணையர் தலைமையில் விசாரணை நடத்திய ராஜ்கோட் பொலிஸார் 5 மருத்துவர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்நிலையில், மருத்துவமனையை நடத்தி வரும் கோகுல் லைப்கேர் தனியார் நிறுவன தலைவரான



மருத்துவர் பிரகாஷ் மோதா, வீால் மோதா மற்றும் டாக்டர் தேஜஸ் கரம்த் ஆகிய 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களுக்கு நடத்திய கொரோனா பரிசோதனை முடிவில் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டு உள்ளது. இவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவிருந்தனர்.

இந்த மூன்று பேர் தவிர தேஜஸ் மோதிவராஸ் மற்றும் திக்விஜய்சின்கா ஜடேஜா ஆகிய 2 பேர் உட்பட ஐந்து பேர் வழக்கில் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

கல்யாணமாலை
வட சர்வதேச
திருமண சேவை





**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1987.03.17
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - சித்திரை 1
செவ் - -------
பாவம் - 21
கல்வி - A/L
தொழில் - பிரான்ஸ் PR
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண்

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 1994.04.19
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - பூசம்
பாவம் - -------
செவ் - 1இல்
கல்வி - கனடா பட்டதாரி
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகன்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# 100 வீதம் செயல் திறனுடைய கொரோனா தடுப்பூசி தயாராம்

## அமெரிக்க நிறுவனம் பகிரங்க அறிவிப்பு



வொஷிங்டன்,டிசெ.01

100 சதவீதம் செயல் திறனுடைய கொரோனா தடுப்பூசி தயார் என்று அமெரிக்காவின் மார்டனா நிறுவனம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த தடுப்பூசியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் உலகின் பல்வேறு நாடுகள் ஈடுபட்டுள்ளன. ரஷ்யா, அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து போன்ற நாடுகள் கொரோனா தடுப்பூசி கண்டுபிடிக்கும்போட்டியில் முன்னிலையில் உள்ளன.

அந்த வகையில் அமெரிக்காவின் மார்டனா என்ற மருந்து நிறுவனம் கொரோனா தடுப்பூசியை தயாரித்துள்ளது. இந்த தடுப்பூசி மனிதர்களிடம் இறுதிகட்ட பரிசோதனையில் உள்ளது.

இந்த நிலையில், தங்களது தடுப்பூசி கொரோனா வைரஸ் பாதிப்பு மிகவும் தீவிரமாக உள்ள நபர்களிடம் 100 சத வீதம் செயல்திறன் கொண்டது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக மார்டனா நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து மார்டனா நிறுவனத்தின் தலைமை மருத்துவ அதிகாரி தால் ஜாக்ஸ் கூறுகையில் எங்களிடம் மிகவும் பயனுள்ள ஒரு தடுப்பூசி இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். அதை நிரூபிப்பதற்கான தரவு இப்போது எங்களிடம் உள்ளது. இந்த தொற்று நோயை திருப்புவதில் எங்கள் தடுப்பூசி முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர் பார்க்கிறோம் என கூறினார்.

இதையடுத்து தங்களது தடுப்பூசியை அவசர தேவைக்கு பயன்படுத்த அனுமதியளிக்குமாறு அமெரிக்கா உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு நிறுவனத் திடமும் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் சுகாதாரத்துறையிடமும் மார்டனா நிறுவனம் அனுமதி கோரியுள்ளது.

ஏற்கனவே ஜேர்மனியின் பயோன் டெக் நிறுவனத்துடன் இணைந்து கொரோனா தடுப்பூசியை தயாரித்துள்ள அமெரிக்காவின் பைஸர் நிறுவனம் தங்களது தடுப்பூசி கொரோனாவை ஒழிப்பதில் 95 சதவீதம் திறன் வாய்ந்தது என அறிவித்து அதை அவசர தேவைக்கு பயன்படுத்த அனுமதி கோரியிருப்பது குறிப்பிடத்தக்கது

# பஸ் – வான் நேருக்கு நேர் மோதி தீப்பற்றி எரிந்தன: 13 பேர் சாவு!

இஸ்லாமாபாத்,டிசெ.01

பாகிஸ்தானில் பஸ் – வான் நேருக்கு நேர் மோதிய விபத்தில் சிக்கி 13 பேர் உடல் கருகி பலியாகினர்.



பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் நராங் மந்தி என்ற இடத்தில் உள்ள நெடுஞ்சாலையில், எதிரில் வரும் வாகனம் தெரியாத அளவுக்கு சாலையில் பனி மூட்டமாக இருந்தவேளையில் இருபதுக்கும் மேற்பட்ட பயணிகளுடன் வந்த வான் ஒன்று சாலையில் எதிர்திசையில் வந்த ஒரு பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியது. இதில் வானில் இருந்த காஸ் சிலிண்டர் வெடித்து சிதறியது. இதனால் வான் மற்றும் பஸ் தீப்பிடித்து எரிந்தன.

இந்த கோர விபத்தில் வான் மற்றும் பஸ்ஸில் பயணம் செய்த 13 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களது உடல்கள் அடையாளம் காணமுடியாதபடி இருந்தன.

மேலும் 17 பேர் பலத்த தீக்காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பாகிஸ்தானில் மோசமான சாலைகள், மோசமாக பராமரிக்கப்படும் வாகனங்கள் மற்றும் பொறுப்பற்ற வாகனம் ஓட்டுதல் போன்றவை ஆபத்தான போக்குவரத்து விபத்துக்களை ஏற்படுத்தி வருகின்றன.

# விமானத்தில் கூடுகட்டிய தேனீக்கள்..! தண்ணீரைப் பீய்ச்சியடித்துக் கலைப்பு



மேற்கு வங்கத்தில் விமானத்தில் கூடுகட்டிய தேனீக்களை தீயணைப்புத்துறையினர் தண்ணீர் அடித்து விரட்டினர்.

கொல்கத்தாவில் உள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சர்வதேச விமான நிலையத்தில் ஏர் விஸ்தாரா நிறுவனத்தின் விமானம் நின்று கொண்டிருந்தது. அப்போது விமானியின் அறைக்கு அடுத்தாற் போல ஆயிரக்கணக்கான தேனீக்கள் கூடுகட்டத் தொடங்கின.

இதனைக் கண்ட தீயணைப்பு வீரர்கள் தண்ணீரைப் பீய்ச்சியடித்து தேனீக்களை கலைத்தனர்.

# இத்தாலி நிலச்சரிவில் சாவு எண்ணிக்கை 3 ஆக உயர்வு



இத்தாலியின் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது.

சார்டினியா என்ற இடத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் கடுமையான மழை கொட்டித் தீர்த்தது. மலைப்பகுதியில் உள்ள இந்த நகரத்தில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

இதனால் ஏராளமான வீடுகள் சேறு சகதியால் சூழப்பட்டன. நூறுக்கும் அதிகமான கார்கள் நிலச்சரிவில் சிக்கி மூழ்கடிக்கப் பட்டன.

இந்த இயற்கைப் பேரிடரில் ஏற்கனவே 2 பேர் இறந்திருந்த நிலையில் தற்போது மேலும் ஒரு மூதாட்டி உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

# சீனாவில் இரசாயன ஆலை வெடிவிபத்து; 53 பேருக்கு 20 ஆண்டுகள் வரை சிறை!



சீனாவில் இரசாயன ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்து வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 53 பேருக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஜியாங்ஷு மாகாணத்தில் உள்ள இரசாயன ஆலையில் கடந்த ஆண்டு பெரும் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 78 பேர் உயிரிழந்தனர். இதில் கவனக்குறைவாக செயல்பட்டதாக ஆலையின் உயர் அதிகாரிகள், பணியாளர்கள் என 53 பேர் குற்றம் சாட்டப்பட்டனர்.

உள்ளூர் நீதிமன்றத்தில் நடந்த இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. அதன்படி அஜாக்கிரதையாக செயல்பட்ட அதிகாரிகளுக்கு 18 மாதங்கள் முதல் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

# ரஷ்யாவில் நிலநடுக்கம்

மொஸ்கோ,டிசெ.01

ரஷ்யாவில் இன்று அதிகாலை கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது.

ரஷ்யா நாட்டின் சோவித்ஸ்கயா காவன் நகரில் இருந்து தெற்கு தென்கிழக்கே 88 கிலோ மீற்றர் தொலைவில் இன்று அதிகாலை 4.24 மணியளவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது.

இது ரிக்டரில் 6.4 ஆக பதிவாகி உள்ளது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. இதனால் ஏற்பட்ட பொருளிழப்பு உள்ளிட்ட பிற விவரங்கள் எதுவும் உடனடியாக வெளிவரவில்லை.

# கரீபியன் மற்றும் பசுபிக் கடல் பகுதிகளில் ஐந்து தொன் போதைப் பொருள் சிக்கியது



கரீபியன் மற்றும் பசுபிக் கடல் பகுதிகளில் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளால் 5 தொன் அளவிற்கு போதைப் பொருள் பிடிபட்டுள்ளதாக பனாமா கடல்படையினர் தெரிவித்துள்ளனர்.கடலில் சென்ற 4 விரைவு படகுகளை இடைமறித்து சோதனை செய்தபோது அதில் இருந்து 5ஆயிரத்து 977 பெட்டிகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொலம்பியாவைச் சேர்ந்த 8பேர், கோஸ்டா ரிக்காவைச் சேர்ந்த 4 பேர் மற்றும் நிகரகுவாவைச் சேர்ந்த ஒருவர் என 13பேர் கைதாகினர்.

மத்திய அமெரிக்கா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகள்தான் போதைப்பொருள் சந்தையாக விளங்குகின்றன எனவும் பனாமா காவல் படையினர் தெரிவித்தனர்.

# இலங்கை உள்நாட்டு போரில் அதிரடிப்படைக்கு பயிற்சி கொடுத்த பிரிட்டிஷ் கூலிப்படையிடம் விசாரணை

நளினி சிவதாசன்
(பி.பி.சி. ஆசியா)



1980களில் இலங்கை பொலிஸ் அதிரடிப்படையினருக்கு பயிற்சி அளித்த பிரிட்டிஷ் கீனி மீனி சேவை என்ற தனியார் பாதுகாப்பு படையினர்.

**1980** 1980களில் இலங்கை பொலிஸ்அதிரடிப்படையினருக்கும் பயிற்சி அளித்த பிரிட்டிஷ் கீனி மீனி சேவை என்ற தனியார் பாதுகாப்பு படையினர் இலங்கை உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட பிரிட்டிஷ் கூலிப்படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டது தொடர்பான குற்றச்சாட்டுகளை லண்டன் பெருநகர காவல்துறையினர் (Metropolitan Police) விசாரிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

1980களில் தமிழ் பிரிவினைவாதிகளை எதிர்த்துப் போராடுவதற்கு, இலங்கை காவல்துறையினரில் ஒரு பிரிவினருக்கு பயிற்சி கொடுத்தது தனியார் பாதுகாப்பு நிறுவனமான கீனி மீனி சர்வீசஸ் (Keenie Meenie Services - KMS). இவர்கள் இலங்கை காவல்துறையின் அதிரடிப்படையினருக்கு (Special Task Force) பயிற்சி கொடுத்துள்ளனர்.

இந்த அதிரடிப்படையினர், இலங்கைப் போரின் போது நடந்த பல மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக



குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். இதில், தமிழ் மக்களை விசாரணையே இல்லாமல் கொலை செய்த குற்றங்களும் அடக்கம்.

பிரிட்டனில் போர் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரிக்கும் பொறுப்பு, மெட்ரோபோலிட்டன் காவல்துறையின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயமாகும்.

அந்த வகையில், ஒரு பிரிட்டன் அமைப்பு முதல் முறையாக பிரிட்டனைச் சேர்ந்த கூலிப் படையினரின் அயல்நாட்டுச் செயல்பாடு தொடர்பாக தற்போது விசாரணை நடத்துவது இதுவே முதல் முறை என நம்பப்படுகிறது.

இலங்கை உள்நாட்டுப் போரின்போது, பிரிட்டனைச் சேர்ந்த கூலிப்படையினர் போர் குற்றங்களைச் செய்ததாக கடந்த மார்ச் மாதம் மெட்ரோபோலிட்டன் காவல்துறைக்கு சில தகவல்கள் கிடைத்தன. அதைமதிப்பிட்ட பின், விசாரணை தொடங்கப்பட்டிருக்கிறது என்கிறார் அந்த காவல் துறையின் செய்தித்தொடர்பாளர்.

பிரிட்டன் அரசு இத்தனை காலமும் ரகசியமாக வைத்திருந்த ஆவணங்களை (Classified Files), சமீபத்தில்ரகசியமற்ற ஆவணங்களாக (Declassified Files) வகைப்படுத்தியது. அதே போல பத்திரிகையாளர் ஃபில் மில்லர் தகவல் சுதந்திரத்தின் கீழ் சேகரித்த பல தரவுகளைத் தொகுத்து, **Keenie Meenie: The British Mercenaries Who Got Away With War Crimes** என்ற புத்தகத்தை எழுதி கடந்த ஜனவரி மாதம் வெளியிட்டார்.

இவைதான் பிரிட்டிஷ் கே.எம்.எஸ் தனியார் கூலிப் படையினர், இலங்கை உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு இருக்கின்றனர் என்பதற்கான ஆதாரங்களை வெளிச் சத்துக்கு கொண்டு வந்துள்ளன.

லண்டன் காவல்துறையின் இந்த விசாரணையை, பிரிட்டனில் வாழும் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் சமூகத்தினர் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர், என்கிறார் ஃபில் மில்லர்.

அந்த சமூகத்தினர் பலரும், இலங்கையில் உள் நாட்டுப்போர் நடந்து கொண்டிருந்த காலங்களில் அந் நாட்டில் இருந்து வெளியேறி பிரிட்டனில் தஞ்சம் அடைந்தவர்கள்.

1980களில் கே.எம்.எஸ் படையினர் இலங்கையில் இருந்த நேரத்தில், பல தமிழ் மக்கள் பிரிட்டனில் அகதிகளாக வந்தனர், என்கிறார் ஃபில் மில்லர்.

அந்த காலங்களில் ஹெலிக்கொப்டர்களில் பொருத்தப்பட்டிருந்த தானியங்கி துப்பாக்கிகளால் மக்கள் சுடப்பட்டதை பார்த்ததை இப்போதும் சிலர் நினைவுகூர்கிறார்கள். அத்தகைய தாக்குதல்களின்போது, அந்த ஹெலிக்கொப்டர்களை இயக்கியது பிரிட்டனைச் சேர்ந்த கூலிப் படையினர்தான் என்பது தெரியவரும் போது இந்த தகவல்கள் பலரையும் அதிர்ச்சி அடைய வைத்திருக்கின்றன என்கிறார் மில்லர்.

இலங்கை போரில் தனியார் கூலிப்படையினர் பங்களிப்பு குறித்து தமது புத்தகத்தில் விவரித்துள்ளார் ஃபில் மில்லர்.

26 ஆண்டுகால பயங்கர மோதல்களுக்குப் பின்னர், 2009ஆம் ஆண்டு மே மாதம், இலங்கை இராணுவம், தமிழீழ விடுதலைப்புலிகளை வீழ்த்தியது.

அந்த போர், இலங்கையை இன அடிப்படையில் இரண்டாகப் பிரித்தது - ஒரு தனி அரசை விரும்பும் தமிழ் கிளர்ச்சியாளர்கள் ஒரு பக்கம். பெரும்பான்மை பௌத்த மதத்தை பின்பற்றும் சிங்களர்கள் ஆதிக்க அர சாங்கம் மறு பக்கம் என இரு முரண்களுக்கு சாட்சியாக இருந்தது.

இந்த சண்டையில் 1,00,000 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் சுமார் 20,000 பேர் (பெரும்பாலும் தமிழர்கள்) காணவில்லை.

இந்த போரின் இறுதியில் இரு தரப்பினரும் மோசமாக அட்டூழியம் செய்தனர் என ஐ.நா. அமைப்பு குற்றம் சாட்டியது. அதிலும் குறிப்பாக, இறுதி கட்ட போரின் போது போர் குற்றங்கள் தீவிரமாக இருந்ததாக ஐ.நா. குறிப்பிட்டது.

இலங்கையில் யார் எல்லாம் காணவில்லையோ அவர்கள் எல்லாம் இறந்துவிட்டதாக கருதலாம் என இந்த ஆண்டின் தொடக்கத்தில் தான் இலங்கை அதிபர் முதல் முறையாக ஒப்புக் கொண்டார்.

கே.எம்.எஸ் நிறுவனம், டேவிட் வாக்கர் என்கிற முன்னாள் பிரிட்டிஷ் விமானப்படை (எஸ்.ஏ.எஸ்) அதிகாரியால் நிறுவப்பட்டது. தற்போது கே.எம்.எஸ் நிறுவனம் இல்லை. ஆனால் 78 வயதான டேவிட் வாக்கர், சலாதின் செக்யூரிட்டி என்கிற நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக இருக்கிறார். இந்த நிறுவனம் கென்சிங்டன் என்கிற இடத்தில் உள்ளது.

கே.எம்.எஸ் தொடர்பான யாருமே இலங்கையில் நடந்த போர் குற்றத்துக்கு உடந்தையாகவோ போர் குற்றங்களில் ஈடுபடவோ இல்லை என்பதை தொடர்ந்து அழுத்தமாகக் கூறி வருகிறார் டேவிட் வாக்கர்.

1980களில் போர் குற்றங்களில், டேவிட் வாக்கர் அல்லது கே.எம்.எஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படுவதை திட்டவட்டமாக மறுக்கிறோம்



இலங்கை போரில் தனியார் கூலிப்படையினர் பங்களிப்பு குறித்து தமது புத்தகத்தில் விவரித்துள்ளார் ஃபில் மில்லர்

என டேவிட் வாக்கரின் பிரதிநிதி ஒருவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்.

சலாதீன் செக்யூரிட்டி என்கிற நிறுவனம், முழுமையாக ஒரு தனி நிறுவனம். இந்த நிறுவனத்துக்கும் இலங்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. டேவிட் வாக்கர் கே.எம்.எஸ் நிறுவனத்தின் பங்குதாரரோ அல்லது இயக்குநரோ அல்ல.

லண்டன் பெருநகர காவல்துறையினர், போர் குற்றம் தொடர்பான விசாரணை தொடர்பாக, சலாதின் நிறுவனத்திடமிருந்தோ, டேவிட் வாக்கரிடம் இருந்தோ, எந்தவொரு உதவியையும் கேட்கவில்லை. ஒருவேளை உதவி கேட்டால், மகிழ்ச்சியாக ஒத்துழைப்பார்கள் என டேவிட் வாக்கரின் பிரதிநிதி வெளியிட்ட அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

# ஓரினச் சேர்க்கையால் வவுனியாவில் எயிட்ஸ்!

## வைத்தியர் கே. சந்திரகுமார் எச்சரிக்கை



வவுனியாவில் ஓரினச் சேர்க்கையால் அதிகரிக்கும் எயிட்ஸ் குறித்து இளைஞர்களை அவதானமாக இருக்குமாறு வவுனியா மாவட்ட பாலியல் நோய் தடுப்பு சிகிச்சை பிரிவு பொறுப்பதிகாரி வைத்தியர் கே. சந்திரகுமார் தெரிவித்திருந்தார்.

நேற்று திங்கட்கிழமை வவுனியா வைத்தியாசாலையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

உலக எயிட்ஸ் தினம் ஒவ்வொரு டிசெம்பர் மாதம் முதலாம் திகதியும் நினைவுகூரப்படுகிறது. அந்த வகையில் வவுனியா மாவட்டத்திலும் உலக எயிட்ஸ் தினத்தை நினைவு கூருகின்றோம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு வரைக்கும் கிட்டத்தட்ட 4 ஆயிரம் நோயாளிகள் எயிட்ஸ் உடன் இனங்காணப்பட்டிருக்கிறார்கள்.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் 2003 இலிருந்து இன்றைக்கு வரைக்கும் 28 எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டிருக்கிறார்கள்.

அதில் 17 நோயாளிகள் இறந்திருக்கிறார்கள். 11 நோயாளிகள் சிகிச்சை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதில் ஆறு ஆண்களும் ஐந்து பெண்களும் அடங்குகிறார்கள்.

பொதுவாக எயிட்ஸ் 3 முறைகளில் தொற்றுகிறது. ஒரு நோய்த் தொற்றுள்ளவருடன் பாலியல் ரீதியாக உறவு கொள்கின்ற போது தொற்றுகிறது.

அதேபோல நோய்த் தொற்றுள்ள ஒருவர் தனது உடலுறுப்பு தானம், இரத்த தானம் என்பவற்றை மேற்கொள்ளும் போது கடத்தப்படுகிறது. மூன்றாவது தொற்றுள்ள ஒரு கர்ப்பிணி தாயிலிருந்து பிள்ளைக்கு பரவுகிறது.

வவுனியா மாவட்டத்தில் தற்போது இளைஞர்கள் மத்தியில் இந்த நோய் தொற்று அதிகரித்துள்ளது. அதாவது ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் அதிகரித்துள்ளனர்.

அதுவே இளைஞர் மத்தியில் இந்த நோய் பரவ அதிக காரணமாக இருக்கின்றது. ஆகவே இளைஞர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். இளைஞர்கள் தமக்குத் தெரியவர்களுடன் இருக்கும் போது பாலியல் ரீதியான தொடர்பை வைத்திருக்க கூடாது.

வவுனியாவில் இருக்கக்கூடிய 36 பெண் பாலியல் தொழிலாளிகள் எங்களிடம் சிகிச்சைக்கு வருகி றார்கள் என்றாலும் அவர்கள் தொடர்ச்சியாக வருகை தருவதில்லை. என்றாலும் அவர்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்கி வருகிறோம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் தாயில் இருந்து பிள்ளைக்கு தொற்று கடத்தப்படுவதை வெற்றிகரமாக நாங்கள் தடுத்திருக்கிறோம். இதற்காக உலக சுகாதார நிறுவனத்திடம் இருந்தும் நற்சான்றிதழ் பெற்றிருக்கிறோம்.

ஆகவே முற்றுமுழுதாக இலங்கையில் இருந்து எயிட்ஸ் தொற்றை இல்லாமற் செய்வதற்கு இலங்கையில் உள்ள அனைவருமே ஒரு தடவை எச்.ஐ.வி. பரிசோதனை செய்ய வேண்டும் என்பதே எங்கள் ஆலோசனையாக இருக்கிறது.

இந்த கொவிட் காலத்தில் விழிப்புணர்வுகளைச் செய்வதில் சிரமம் இருப்பதால் ஊடகங்கள் ஊடாக இதனைச் செய்ய விரும்புகிறோம்.

2025 ஆம் ஆண்டுக்குள் முற்றுமுழுதாக எச்.ஐ.வி தொற்றை இல்லாமற் செய்வதே உலக சுகாதார ஸ்தாபனத்தின் குறிக்கோளாக இருக்கிறது.

இந்த ஆண்டுக்கான தொனிப்பொருள் ’எச்.ஐ.வி தடுப்பு இளைஞர்களின் பொறுப்பு’ என்பதாக இருக்கிறது. காரணம் இந்த வருடத்தைப் பொறுத்த வரைக்கும் இளைஞர் மத்தியில்தான் இந்த தொற்று அதிகமாக காணப்படுகிறது. – என மேலும் தெரிவித்திருந்தார்.

# மன்னாரின் 4 தொற்றாளரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு







மன்னார் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் போது 4 நபர்களுக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்கள் உரிய சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நேற்று திங்கட்கிழமை மாலை விசேட அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் அமைந் துள்ள வட மாகாண தொற்று நோய் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் 3 பேர் முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள சவேரியார் புரத்தில் மீன் வாடி அமைத்து கடற்தொழிலில் ஈடுபட சிலாபத்தில் இருந்து வந்தவர்கள்.

இவர்கள் கடந்த 19 ஆம் திகதி சிலாபத்தில் இருந்து வருகை தந்து வரையாறுக்கப்பட்ட நகர்வு என்ற அடிப்படையில் தமது தொழில் நடவடிக்கைகளுக்கு மாத்திரம் கடலுக்குச் செல்ல வும், சமூகத்திற்குள் செல்லாமல் இருக்கவும் அனுமதிக்கப்பட்டு கடற்தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

வருகை தந்தவர்களில் 6 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 3 நபர்களுக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களுடன் தொடர்பாக இருந்த, அடிப்படை உதவிகளை மேற்கொண்ட 15 உள்ளூர் வாசிகள் உள்ளடங்களாக 18 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த 3 நபர்களும், இரணை இலுப்பைக் குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் நேற்றைய தினம் திங்கட்கிழமை(30) மாலை விசேட சுகாதார பாதுகாப்புக்களுக்கு மத்தியில் கிளிநொச்சியில் அமைந்துள்ள வட மாகாண தொற்று நோய் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த நபர்களுடன் தொடர்பு பட்டவர்களையும் அடையாளம் காணும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகளின் போது மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.வினோதன். முசலி பிரதேச செயலாளர், முசலி சுகாதார வைத்திய அதிகாரி, முசலி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய சுகாதார பரிசோதகர்கள், சிலாவத்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# எயிட்ஸ் தினம் தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும்!

## பிரதமர் மஹிந்த கோரிக்கை



கொழும்பு, நவ. 01

கொவிட்-19 தொற்று தொடர்பில் மாத்திரம் கவனம் செலுத்திவரும் ஒரு சூழ்நிலையிலும், இன்றைய எயிட்ஸ் தினம் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனீவாவில் அமைந்துள்ள உலக சுகாதார அமைப்பில் எயிட்ஸ் தொடர்பான உலகளாவிய நிகழ்ச்சியின்போது தகவல் அதிகாரிகளான ஜேம்ஸ் பன்ஸ் மற்றும் தாமஸ் நெட்டேர் ஆகிய இருவருக்கு தோன்றிய யோசனைக்கு அமைய சர்வதேச எயிட்ஸ் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அதற்கமைய 1988ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் டிசெம்பர் முதலாம் திகதி கடைப்பிடிக்கப்படும் சர்வதேச எயிட்ஸ் தினம், எச்.ஐ.வி. தொற்று பரவலினால் ஏற்படும் எயிட்ஸ் தொற்றுநோய் தொடர்பில் விழிப்பூட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அரச மற்றும் சுகாதார அதிகாரிகளினால் எயிட்ஸ் தொடர்பான எண்ணக்கருக்களில் பேச்சுக்கள், மாநாடுகள், பேரணிகள் ஏற்பாடு செய்யப்பட்டு இலங்கையில் இத்தினம் அனுஸ்டிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படுகின்ற எயிட்ஸ் தினம் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது-

'எச்.ஐ.வி. தொற்றை முடிவுக்கு கொண்டுவருதல், எதிர்ப்பு திறன் மற்றும் தாக்கத்தை குறைத்தல் என்பதே 2020ஆம் ஆண்டின் எயிட்ஸ் தினத்தின் கருப்பொருளாகும்.

உலகளாவிய நிலையான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு 2030ஆம் ஆண்டளவில் உலகளாவிய ரீதியில் எயிட்ஸை இல்லாதொழிப்பதே நோக்கமாகும்.

அதற்கமைய 2025ஆம் ஆண்டளவில் இந்நாட்டிலிருந்து எயிட்ஸ் நோயை இல்லாதொழிப்பதை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றோம். அதற்கான தயார்ப்படுத்தல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும், தயார்ப்படுத்தல்களின் மூலம் எயிட்ஸை இல்லாதொழிக்க முடியாததுடன், அதற்கு தேவையான பலம் மனித சமூகத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றேன்.

அது அனைத்து மனித சமூகத்தினரதும் பொறுப்பாகும். அப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் அனைவரும் கட்டுப்பட வேண்டும்.

உலகளாவிய ரீதியில் எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கை இதுவரை 37 மில்லியனை தாண்டியுள்ளது. ஆண்டுக்கு 1.7 மில்லியன் பேர் புதிதாக எச்.ஐ. வி. தொற்றுக்கு உள்ளாவதுடன், இலங்கையில் அது ஒரு சதவீதத்திற்கும் குறைவாகும்.

எது எவ்வாறாயினும் எயிட்சுக்கு எதிராக போராடுவதற்கும், தடுப்பதற்கும் நாம் உறுதியாக இருக்க வேண்டியதுடன், அது தொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டும். எச்.ஐ.வி. தொற்றுடைய நபர்கள் சமூகத்தினால் ஒதுக்கப்படாதிருப்பதற்கும், அவர்களை தேவையான சிகிச்சைக்கு உட்படுமாறும் நாம் அறிவிக்க வேண்டும்.

அதனால் எச்.ஐ.வி. தொற்றாளர்கள் தேவையான சிகிச்சைகளை முறையாக முன்னெடுத்து, நோயை கட்டுப்படுத்திக் கொள்வதற்கு எயிட்ஸ் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள அனைவரும் அது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு இன்றைய தினத்தில் மேற்கொள்ளப்படும் அரசாங்கத்தின் விழிப்பூட்டலை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆற்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு!

## மஸ்கெலியாவில் சம்பவம்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை ஸ்டஸ்பீ தோட்ட அவரவத்தை பிரிவில் நேற்று திங்கட்கிழமை காலை ஆறு மணிக்கு தனது மாட்டு பண்ணைக்கு புல் அறுக்க சென்ற ஒரு குழந்தையின் தந்தையான 25 வயதுடைய முனியாண்டி சதீஸ் என்பவர் ஆற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் ஆற்றில் சடலமாகக் கிடக்கின்றமையை நேற்று மதியம் 1.30 மணியளவில் அவதானித்த தோட்ட உத்தியோகத்தர் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்நிலையில் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பணிப்புரையில் உதவி அதிகாரி சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

மேலும் அவரது மனைவி தற்போது கர்ப்பிணியாக உள்ளார் எனவும் காலை 6 மணிக்கு புல் அறுக்க சென்றவரை காணவில்லை என தேடிய போது அந்த நபர் இவ்வாறு ஆற்றில் சடலமாக மிதப்பதை அயலவர்கள் கண்டனர் எனவும் அதன்பின் தோட்ட முகாமையாளருக்கு அறிவித்தனர் எனவும் பொலிஸ் உதவி அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் சம்பவ இடத்துக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி நரசிம்ம பெருமாள் சென்று பார்வையிட்ட பின்னர் அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் மேலும் அறுவருக்கு கொரோனா!

நுவரெலியா மாவட்டத்தில் மேலும் 6 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திம்புள்ள-பத்தனை, லிந்துலை, பூண்டுலோயா, தலவாக்கலை மற்றும் அக்கரப்பத்தனை ஆகிய பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த அறுவருக்கே இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது. இவர்கள் அனைவரும் கொழும்பில் இருந்து வந்தவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து இவர்களுடன் நேரடி தொடர்பில் இருந்தவர்களும் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களிடம் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட அறுவரும் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பூண்டுலோயா, மல்தெனிய பகுதியில் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ள 44 வயதுடைய நபர் கடந்த 19 ஆம் திகதி கொழும்பு புளுமெண்டல் பகுதியிலிருந்து வந்துள்ளார். இவரிடம் கடந்த 28 ஆம் திகதி பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

புறக்கோட்டையில் மொத்த வியாபார விற்பனை நிலையமொன்றில் தொழில்புரிந்த நிலையில் கடந்த 19 ஆம் திகதி திம்புள்ள - பத்தன பொலிஸ் பிரிவிலுள்ள குயின்ஸ்பேரி தோட்டத்துக்கு வந்த 36 வயது நபரொருவருக்கும் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெயாவல் தோட்டத்தில் வலகா பிரிவு மற்றும் தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூமூட் தோட்டத்தில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்கள் இருவரும் கொழும்பில் இருந்தே வந்துள்ளனர். அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டொரின்டன் தோட்டத்திலும் இரு இளைஞர்களுக்கு வைரஸ் தொற்று பி.சி.ஆர் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் கொழும்பு துறைமுகத்தில் வேலை செய்துள்ளார். ஏனையவரும் கொழும்பில் தொழில் புரிந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மஹர சிறைச்சாலைச் சம்பவம் விசாரணைக்கு ஐ.நா. வலியுறுத்து!

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பான உண்மைகள் உரிய விசாரணைகளின் ஊடாக வெளிக்கொணரப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், இலங்கையில் நெல்சன் மண்டேலா சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

மஹர சிறைச்சாலை அமைதியின்மை தொடர்பான கரிசனையை வெளிப்படுத்தி தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் பதிவொன்றை செய்துள்ளார்.

அதில், சிறைச்சாலையில் ஏற்பட்ட பதற்றநிலை மற்றும் அதனால் கைதிகள் சிலர் மரணமடைந்துள்ளமை தொடர்பாக வெளியான செய்திகள் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உரிய விசாரணைகளின் ஊடாக இந்தச் சம்பவம் தொடர்பான உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2020 இல் வெளியிடப்பெற்றது.